©
தமிழ்நாடு அரசு
2008

[Regd. No. TN/CCN/117/2006-08.
[விலை: ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 45]
சென்னை, புதன்கிழமை, நவம்பர் 19, 2008
கார்த்திகை 4, திருவள்ளுவர் ஆண்டு–2039

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**2008 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது இதன்மூலம் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:—**

**தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 10/2008**

***1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதோர் அவசரச் சட்டம்.***

இம்மாநிலச் சட்டமன்றப்பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும், இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதைத் தேவையானதாக்கிற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக்காண்பதாலும்;

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச் சட்டத்தை இப்போது இதன்மூலம் பிறப்பிக்கின்றார்:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்த அவசரச் சட்டம், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (எட்டாம் திருத்த) அவசரச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

172–A எனும் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 172–A எனும் பிரிவில், "சிற்றூராட்சி" என்னும் சொல்லுக்குப் பதிலாக "மாவட்ட ஆட்சியர்" என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

172–B ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 172–B என்னும் பிரிவின் வரம்புரை உள்ளடங்களான அப்பிரிவில், ‘‘சிற்றூராட்சி’’ என்னும் சொல் வருகிற இரண்டு இடங்களிலும் அதற்குப் பதிலாக ‘‘மாவட்ட ஆட்சியர்’’ என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

4. முதன்மைச் சட்டத்தின் 220–ஆம் பிரிவில்,—

220–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1). (2)–ஆம் உட்பிரிவில், ‘‘ஊராட்சி’’ என்னும் சொல்லுக்குப் பதிலாக, ‘‘ஊராட்சி அல்லது நேர்விற்கேற்ப மாவட்ட ஆட்சியர்’’ என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

**(2). (2)–**ஆம் உட்பிரிவிற்குப் பின்வரும் வரம்புரை சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

**"வரம்புரை:** ஆனால் விளம்பரப்பலகைகளுக்கான உரிமம் ஒவ்வொன்றுக்கும் அரசினால் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் கட்டணங்கள் விதிக்கப்படுதல் வேண்டும்,'';

**(3). (3)–**ஆம் உட்பிரிவில், ''செயலாளர்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, "செயலாளர் அல்லது மாவட்ட ஆட்சியர்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்**.**

**(4). (5)–**உட்பிரிவில், (a)-எனும் கூறில், ''செயலாளர்'' என்னும் சொல்லுக்குப் பதிலாக, ''செயலாளர் அல்லது மாவட்ட ஆட்சியர்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்**.**

2008**–**ஆம் ஆண்டு அக்டோபர்
திங்கள் 28**–**ஆம் நாள்**.**

**சுர்ஜித் சிங் பர்னாலா,**
*தமிழ்நாடு ஆளுநர்.*

**விளக்கவுரை**

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) வகைமுறைகளின்படியும் அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படியும் சிற்றூராட்சியின் செயல் அதிகாரிக்கு ஊராட்சியின் உள்ளாட்சிப் பரப்பிடங்களில் விளம்பரப் பலகைகளை நிறுவுவதற்கான உரிமம் வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசினால் வகுத்துரைக்கப்படும் பெரும அளவு கட்டணத்திற்கு மேற்படாத வகையில் இருக்கவேண்டிய உரிமக்கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு ஊராட்சிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அத்தகைய விளம்பரப்பலகைகளின் மீது அமையும் விளம்பரங்களின் மீதான வரி வீதங்களை தீர்மானிப்பதைப் பொறுத்த அளவில், இது குறித்து அரசினால் நிர்ணயிக்கப்படும் வீதங்களுக்குட்பட்டு, விளம்பரங்களின் அமைவிடம், அளவு, அதன் பார்வைப்பரப்பு, இயல்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தீர்மானிப்பதற்கு சிற்றூராட்சிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து விளம்பரப்பலகைகளையும் கண்காணிக்கின்ற மற்றும் முறைப்படுத்துகிற நிலையை மேம்படுத்துவதன் பொருட்டும், விளம்பரப்பலகைகளுக்கு உரிமம் வழங்குவதை திறனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்வதன் பொருட்டும், அரசானது 21/1994–என்னும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதன் மூலம், உரிமம் வழங்குவதற்கும், விளம்பர வரியைத் தீர்மானிப்பதற்கும், ஊராட்சியில் விளம்பரங்களை முறைப்படுத்துவதற்கும், அரசினால் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படவேண்டிய விளம்பரப் பலகைகளை நிறுவுவதற்கான உரிமத்தை பொறுத்த அளவில் அல்லாமல், மேற்சொன்னச் சட்டத்தின்படி பெறவேண்டியதாக இருக்கிற அனைத்து உரிமங்களையும் பொறுத்த அளவில் உரிமக் கட்டணங்களை நிர்ணயிப்பதற்கும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளிப்பதெனவும் முடிவு செய்துள்ளது.

2. இந்த அவசரச் சட்டம் மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது